# ஸ்ரீ காமாக்ஷி அம்மன்

## ஸ்ரீ வைகுண்டப் பெருமாள் வகையறா தேவஸ்தானம்

மாங்காடு, சென்னை–600 122.

ஸ்ரீ சக்கர அர்த்தமேரு ஸ்ரீ காமாக்ஷி அம்மன்

புனராவர்த்தன ஜீர்ணோர்த்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக பத்திரிகை




**நாள் : 04.12.2016, ஞாயிற்றுக்கிழமை**

**காலை 7.32 மணிக்குமேல் 9.21 மணிக்குள்**

ஸ்ரீ காமாக்ஷி அம்மன் துணை







# ஸ்ரீ காமாக்ஷி அம்மன் ஸ்ரீ வைகுண்டப் பெருமாள் வகையறா தேவஸ்தானம்

மாங்காடு, சென்னை – 600 122.

## ஸ்ரீ சக்கர அர்த்தமேரு ஸ்ரீ காமாக்ஷி அம்மன் புனராவர்த்தன ஜீர்ணோர்த்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக பத்திரிகை

*தேங்கமழ் கமலம் பூக்கும் செழுவயல் மாங்காட்டூரில்*
*ஓங்கு ஸ்ரீ சக்கரத்தே வியாபித்து நடுவாய் தோன்றி*
*பாங்குடன் பக்தர்க்கெல்லாம் பரிந்தருள் செய்தே நாளும்*
*தாங்கு காமாக்ஷியன்னாய் தாள்மலர் போற்றி! போற்றி!*

tnhrce.org

அன்புடையீர்!

திருக்கயிலாயத்தில் தன் பிராட்டியுடன் சிவபெருமான் வீற்றிருந்தபோது ஈசனின் கண்களைப் பொத்தினால் என்ன? என்று விளையாட்டாய் அம்மை ஈசனின் கண்களைப்பொத்த, சூரிய, சந்திரர்களான ஈசனின் கண்கள் அம்மையால் மறைக்கப்பட்டதால், சர்வலோகங்களும் இருளில் மூழ்கித் திண்டாடின. ஈசனின் கோபத்திற்கு ஆளான அம்பாள் அவரின் சொற்படி பூவுலகில் மாங்காட்டில் ஐந்து குண்டங்களில் அக்னி வளர்த்து (பஞ்சாக்னி) கடுந்தவம் புரிந்தாள். தவத்திற்கிரங்கி காமாக்ஷி அம்மையை மணம்புரிய வரும் சிவபெருமான் அசரீரி மூலம் அம்மையை காஞ்சிக்கு செல்லச் சொல்கின்றார். அம்மையும் காஞ்சியிலே சென்று மணலால் லிங்கவடிவில் ஈசனை பூஜித்த பின்னர் மணம்புரிந்துகொள்கிறார். காஞ்சிக்குச் செல்கையில் மாங்காட்டில் தவம் செய்த பஞ்சாக்னியை அப்படியே விட்டுச் சென்றதால் மாங்காடும், சுற்றுப் பிரதேசங்களும் தீயின் வெம்மையில் வறண்டன. பின்னர் ஆதிசங்கர பகவத்பாதாள், தேசாந்திரம் செல்லும்போது மாங்காட்டின் நிலையறிந்து அஷ்டகந்தம் எனப்படும் எட்டு மூலிகைகளால் ஆன அர்த்தமேரு ஸ்ரீசக்கரத்தை அம்மை தவம்புரிந்த இடத்தில் பிரதிஷ்டை செய்தார். இதனால் அக்னியின் கொடுமை மறைந்து மக்கள் மங்கள சுபிட்சம் பெற்றனர். அதன் காரணமாக இத்திருத்தலத்தில் ஸ்ரீ சக்கரமே மூலவராக வழிபாடு செய்யப்படுகிறது.

நிகழும் ஸ்வஸ்தி ஸ்ரீ துர்முகி வருடம் கார்த்திகை மாதம் 19–ம் தேதி **(04.12.2016)** ஞாயிற்றுக்கிழமை வளர்பிறை பஞ்சமி சுக்ர புத நல்லோரை திருவோண நட்சத்திரம் அமிர்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 7.32 மணிக்குமேல் 9.21 மணிக்குள் தனுர் லக்னத்தில் ஸ்ரீசக்கர ஸ்ரீகாமாக்ஷி அம்மனுக்கு ஆன்றோர்கள், சான்றோர்கள், பக்தர்கள் முன்னிலையில் **மஹா கும்பாபிஷேகம்** நடைபெற உள்ளது. கும்பாபிஷேகத்தைக் கண்ணால் கண்டு மனதால் தியானித்து வாழ்வில் சகல சௌபாக்கியங்களும் பெற்றுய்யுமாறு பிரார்த்திக்கிறோம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி

செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்

சீர்மிகு நல்லாட்சியில் நடைபெறும் மஹா கும்பாபிஷேக விழாவில்

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள், சமயச் சான்றோர்கள் மற்றும் பக்தபெருமக்கள் அனைவரும் கலந்துகொண்டு விழாவினை சிறப்பிக்கஉள்ளனர்.

இவ்விழாவிற்கு அனைவரும் வருகை தந்து ஸ்ரீகாமாக்ஷி அம்மனின் திருவருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

## மஹா கும்பாபிஷேகம் நிகழ்ச்சி நிரல்

### 28.11.2016 கார்த்திகை மாதம் 13–ந் தேதி – திங்கட்கிழமை

| | |
|---|---|
| காலை 7.00 மணி | மங்கள இசை, அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, மஹா கணபதி ஹோமம் |
| மாலை 5.00 மணி | கிராம தேவதைகள் மற்றும் உபதிருக்கோயில்கள் வழிபாடு |

tnhrce.org

### 29.11.2016 கார்த்திகை மாதம் 14–ந் தேதி – செவ்வாய்க்கிழமை

| | |
|---|---|
| காலை 8.00 மணி | தேவி அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, தனபூஜை, நவகோள்வேள்வி, கோ–பூஜை, தீபாராதனை |
| மாலை 5.00 மணி | ப்ரவேசபலி – வாஸ்துசாந்தி – ரக்ஷோக்னஹோமம், ம்ருத்சங்க்ரஹணம் – வேதபாராயணம் |

### 30.11.2016 கார்த்திகை மாதம் 15–ந் தேதி – புதன்கிழமை

| | |
|---|---|
| காலை 7.00 மணி | சாந்தி ஹோமம், மூர்த்தி ஹோமம், அஸ்த்ரமந்த்ரஜபம், திசாஹோமம், ஸம்ஹிதாஹோமம், கலசாபிஷேகங்கள், தீபாராதனை |
| மாலை 6.00 மணி | ஷோடசதீபபூஜை, அங்குரார்ப்பனம் மற்றும் பக்தஜனப்ரார்த்தனை (வழிபாடு) |
| இரவு 8.10 மணி | திருக்கோயில் பரம்பரைதர்மகர்த்தா, துணை ஆணையர் / செயல் அலுவலர், மற்றும் ப்ரதான ஆச்சார்ய ரக்ஷாபந்தனம் (காப்பு கட்டுதல்) |

### 01.12.2016 கார்த்திகை மாதம் 16–ந் தேதி – வியாழக்கிழமை

| | |
|---|---|
| காலை 7.30 மணி | விக்னேஸ்வர பூஜை, கங்கை முதலிய புண்ணிய நதிகளின் தீர்த்தங்கள் தீர்த்த சங்கரஹணம் |
| காலை 11.00 மணி | அக்னி சங்க்ரஹணம் – யாகசாலை அலங்கரித்தல் ரித்விஜ ஆச்சார்ய ரக்ஷாபந்தனம் |
| மாலை 5.00 மணி | அங்குரபூஜை கும்ப அலங்காரம், கலாகர்ஷணம் யாத்ரா ஹோமம், கும்பங்கள் யாகசாலை வந்து சேருதல். |
| மாலை 7.00 மணி | முதல் காலயாக பூஜை ஆரம்பம் – பூர்ணாஹூதி – தீபாராதனை |

## 02.12.2016 கார்த்திகை மாதம் 17-ந் தேதி - வெள்ளிக்கிழமை

| | |
|---|---|
| காலை 8.00 மணி | இரண்டாம் கால யாக பூஜை - பூர்ணாஹூதி - தீபாராதனை |
| நண்பகல் 12.00 மணி | ஸ்ரீ விநாயகர் மற்றும் பரிவார மூர்த்தங்களுக்கு அஷ்டபந்தனம் சாற்றுதல் |
| மாலை 5.00 மணி | மூன்றாம் கால யாக பூஜை - பூர்ணாஹூதி - தீபாராதனை |

## 03.12.2016 கார்த்திகை மாதம் 18-ந் தேதி - சனிக்கிழமை

| | |
|---|---|
| காலை 8.00 மணி | நான்காம் கால யாக பூஜை - பூர்ணாஹூதி - தீபாராதனை மற்றும்<br>நவாவர்ணபூஜை. லலிதா மூலமந்திரத்ரிசதீ கட்கமாலாபூஜை<br>ஸ்ரீசக்ர அர்த்தமேருவிற்கு அஷ்டகந்த சமர்ப்பணம் |
| மாலை 5.00 மணி | ஐந்தாம் கால யாக பூஜை - பூர்ணாஹூதி - தீபாராதனை |

## 04.12.2016 கார்த்திகை மாதம் 19-ந் தேதி - ஞாயிற்றுக்கிழமை

| | |
|---|---|
| காலை 4.00 மணி | ஆறாம் கால யாக பூஜை - பூர்ணாஹூதி - தீபாராதனை - அவபிருதயாகம்<br>பூஜைகள். ஹோமங்கள், விசேஷத்ரவ்யாஹூதி. மஹாசங்கல்பம் |
| காலை 6.50 மணி | மஹாபூர்ணாஹூதி, யாத்ராதான சங்கல்பம், மஹாகற்பூர ஆரத்தி |
| காலை 7.05 மணி | சகலவாத்தியங்களுடன் யாகசாலையிலிருந்து கலசங்களுடன் புறப்படுதல் |
| காலை 7.32 மணிக்குமேல் 9.21 மணிக்குள் | இராஜகோபுரம், ஸ்ரீ வரசித்தி விநாயகர் விமானம், மூலவர் விமானம்,<br>ஸ்ரீமூலவர் காமாக்ஷி அம்மன், அர்த்தமேரு ஸ்ரீசக்கரம் மற்றும்<br>ஸ்ரீ தபஸ் காமாக்ஷி அம்மன் விமானம், உற்சவர் ஸ்ரீலட்சுமி ஸ்ரீசரஸ்வதி பரிவார ஸஹித<br>**"மஹா கும்பாபிஷேகம்"** - தீபாராதனை-தீர்த்த பிரசாதம் வழங்குதல் |
| பிற்பகல் 3.00 மணி | **மஹா அபிஷேகம்** |
| இரவு 7.00 மணி | உற்சவர் ஸ்ரீலட்சுமி, ஸ்ரீசரஸ்வதி, ஸ்ரீகாமாக்ஷி அம்மன்<br>விசேஷ அலங்காரத்தில் சகல வாத்தியங்களுடன்<br>**"வெள்ளி ரிஷப"** வாகனத்தில் மாடவீதி உலா |

**மேற்படி தினங்களில் கோ பூஜை, கஜ பூஜை, அஸ்வ பூஜை, நாக பூஜை,**
**வேதபாராயணங்கள், பன்னிருதிருமுறை ஓதுதல்**
**ஆன்மீக சமயச்சொற்பொழிவுகள், சிவவாத்தியகோஷங்கள் மற்றும்**
**பக்தி இசை நிகழ்ச்சிகள் நடைபெறும்.**

சர்வசாதகம்
"திருக்கயிலாயமணி" சைவசித்தாந்த சாகரம்
**எஸ்.ரவி சிவாச்சாரியார்**, மாங்காடு.

**இரா. வான்மதி**, எம்.எல்
துணை ஆணையர் / செயல் அலுவலர்

டாக்டர் மணலி. **ஆர்.சீனிவாசன்**, எம்.டி.எஸ்
பரம்பரை தர்மகர்த்தா

tnhrce.org

# இன்னிசை நிகழ்ச்சிகள்

| தேதி | கிழமை | நேரம் | நிகழ்ச்சி நிரல் |
|---|---|---|---|
| 01.12.2016 | வியாழக்கிழமை | மாலை 4.30 | ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம் ஆஸ்தான தவில் வித்வான் திருவொற்றியூர் **திரு. T.S. ரத்தினவேல்** குழுவினரின் நாதஸ்வர இசை |
| | | மாலை 6.30 | திருவாசகச் செந்நாவலர் மயிலை **திரு. பா. சற்குருநாதன்** குழுவினரின் திருமுறை இசை |
| | | இரவு 8.00 | **நந்தாவின் பாலு & பாலு ஸ்ருதி** குழுவினரின் இன்னிசை |
| 02.12.2016 | வெள்ளிக்கிழமை | காலை 9.30 | **திருமதி பி. சுசித்ரா** குழுவினரின் பக்தி இசை |
| | | காலை 11.00 | **டாக்டர் சுதா சேஷையன்** அவர்களின் சொற்பொழிவு (துணை முதல்வர், சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை) |
| | | மாலை 5.00 | செம்பனார் கோயில் **திரு. S.R.G.S. மோகன்தாஸ்** குழுவினரின் நாதஸ்வர இசை |
| | | மாலை 6.30 | கலைமாமணி டாக்டர் பத்மஸ்ரீ **திரு. கதரி கோபால்நாத்** குழுவினரின் ஸாக்ஸபோன் இசை |
| | | இரவு 8.00 | **லஷ்மன் ஸ்ருதி** குழுவினரின் இன்னிசை |
| 03.12.2016 | சனிக்கிழமை | காலை 10.00 | **திரு. நாகை முகுந்தன்** அவர்களின் சொற்பொழிவு |
| | | மாலை 5.00 | பொன்னேரி **திரு. வாசு** குழுவினரின் நாதஸ்வர இசை |
| | | மாலை 6.30 | மகாநதி டாக்டர் **"ஷோபனா விக்னேஷ்"** குழுவினரின் பக்தி இசை |
| | | இரவு 8.00 | கலைமாமணி **டாக்டர் சங்கர் கணேஷ்** மற்றும் **வீரமணி கர்ணா** குழுவினரின் இன்னிசை |

tnhrce.org


tnhrce.org

ஸ்ரீ காமாக்ஷி அம்மன்
ஸ்ரீ வைகுண்டப் பெருமாள் வகையறா தேவஸ்தானம்
மாங்காடு, சென்னை – 600 122.